இணைப்பு

[207-ம் பக்கத்தில் 326-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

விவர அறிக்கை.

மிடாலம்துறை, எரமன்துறை, பள்ளம்துறை, மேல்மணக்குடி ஆகிய கன்னியாகுமரி மாவட்ட கடலோரக் கிராமங்களில் கடலரிப்பைத் தடுக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் :—

மிடாலம் துறை : கரையோரமாக 3,300 அடி நீளத்திற்கு கரடுமுரடான கற்களை நிரப்பி, 2 அடி, 6 அங்குல இடைவெளிகளில் இரண்டு வரிசைப் பனைமரக் கம்பங்களை இறக்கும் பணி ரூ. 89,500 மதிப்பீட்டுச் செலவில் 1971-ஆம் ஆண்டு மே மாதத்தில் முடிக்கப் பட்டது.

எரமன்துறை : ஏ.வி.எம். கால்வாய் கடலுடன் கூடுமிடத்தில் மேற் புறத்தில் 100 அடி இடைவெளிகளில் 20 அடி நீளம் கொண்ட நீர் அரிப்புத் தடுப்பிகள் மூன்றும் நீரோட்டத் திசையில் 300 அடி இடைவெளிகளில் 100 அடி, 60 அடி நீளம் உள்ள நீர் அரிப்புத் தடுப்பிகள் மூன்றும், ரூ. 63,000 மதிப்பீட்டுச் செலவில் பெரும்பாலும் முடிக்கப்பட்டன.

பள்ளம் துறை: கடற்கரை நெடுக R. R. கல்கட்டுமான வேலியுடன் 450 மீட்டர் நீளத்துக்கு ஒரு தடுப்புச் சுவர் ரூ. 99,000 செலவில் கட்டப்பட்டது.

மேலமணக்குடி கிராமம். கரையரிப்புத் தடுப்புப் பணிகளில் கீழ்க்கண்டவை அடங்கும்--

மேற்குப் புறமாக உள்ள அலைதடுப்புச் சுவர் மீதி 355 அடி நீளத்திற்கும் பழையாற்றின் முகத்துவார இறுதியிலிருந்து, கரையின் தெற்குப் பக்கத்தின் மீது 100 அடி நீளத்திற்கும் 5 கன அடிக்குக் குறையாத அளவுள்ள பெரிய கற்கள் 2,600-ஐ அடுக்குதல் 1970 மே திங்களில் ரூ. 47,200 செலவில் இப்பணி முடிக்கப் பட்டுள்ளது.

The steps taken to prevent sea erosion in the coastal villages of Midalamthurai, Eramanthurai, Pallamuthurai and Melamanakudi in Kanyakumari district are indicated below—

***Midalamthurai.*—Construction of protection work with two rows of palmyrah piles driven at 2 feet 6 inches apart with rough stone filling for a total length of 3,300 feet along the shore was completed during May 1971 at an estimated cost of Rs. 89,500.**

Eramanthurai.—The work of providing three groynes of 20 feet length at 100 feet intervals at above the Confluenc of A.V.M. Canal and also down stream, groyers of 100 feet and 60 feet lengths at 300 feet intervals at an estimated cost of Rs. 63,000 has almost been completed.

Pallamthurati —A retaining wall of 450 M with R.R. Masonry along the shore-line at a cost of Rs. 99,000 was constructed.

Melamanakudi village.—Protective measures consist of dumping 2,600 numbers of large sizes stones not less than 5c. feet in volume for a length of 35› feet on the western retaining wall and 100 feet on the southern side of the coast from the mouth end of the Pazhayar river. The work has been completed at a cost of Rs. 47,200 during May 1971.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS